## பெற்றோர் யோசிக்க சில கேள்விகள்!

தமிழ்நாட்டு வாழ் பெற்றோர்களுக்கு, சில கேள்விகள் என தனது முகநூலில் பதிவிட்டுள்ளார், வில்லவன் ராமதாஸ் என்கிற பதிவர்.

“இது அரசியல் கட்சிகளுக்கு இடையேயான பிரச்சினை மட்டுமே என்று கருதுகிறீர்களா? என்று தொடங்கும் அவரது பதிவில், இன்றைய கற்றல் சூழலில் தனியார் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு இந்தியும் சுமைதான் என்று குறிப்பிட்டுள்ளார்.

உத்தர பிரதேசத்தில் சுமார் 8 லட்சம் மாணவர்கள் பொதுத் தேர்வில் ஹிந்தி பாடத்தில் தோல்வியடைகிறார்கள். இந்தியா முழுக்க ஆண்டுக்கு 65 லட்சம் பள்ளி மாணவர்கள் பொதுத் தேர்வுகளில் தோல்வி அடைகிறார்கள். இதையெல்லாம் சரிசெய்ய முயலாத பா.ஜ.க. அரசு தமிழ்நாட்டு மாணவர்கள் மூன்றாவதாக ஒரு மொழியை கற்றுக் கொண்டே ஆக வேண்டும் என, ஸ்பெஷல் அக்கறை காட்டுவதற்கு என்ன காரணம் இருப்பதாக நீங்கள் நினைக்கிறீர்கள்?

குழந்தை பிறப்பு விகிதம் கணிசமாக குறைவதால், அடுத்த 20 ஆண்டுகளில் ஜப்பானில் மட்டும் சுமார் 70 லட்சம் புதிய வேலைவாய்ப்புகள் வெளிநாட்டவர்க்குக் கிடைக்கப் போகின்றன. ரயில்வே உள்ளிட்ட ஒன்றிய அரசின் ஒட்டுமொத்த பணியாளர்களின் எண்ணிக்கையை விட, இது இரண்டு மடங்கிற்கும் அதிகம். இப்படி உலக அளவில் ஏராளமான வாய்ப்புகள் உருவாகப் போகின்றன. ஹிந்தியை மல்லுக்கட்டி படிப்பது இந்த உலகளாவிய வேலைவாய்ப்புக்கு எந்த வகையில் உதவி செய்யும்?

முன்பு வேலை வாய்ப்பு இல்லாமல் முறுக்கு விற்கவும், பருப்பு விற்கவும் வட இந்தியாவிற்கு வேலை தேடிச் செல்ல வேண்டிய நிலை இருந்தது. இன்று ஹிந்தியைக் கற்றுக் கொண்டே ஆக வேண்டும் என்பதற்கான காரணங்கள் என்ன இருக்கின்றன?

ஹிந்தி ஒரு கட்டாய பாடமாக்கப்பட்ட பிறகு மத்திய அரசு நடத்தும் எல்லா வகையான தகுதித் தேர்வுகளையும் ஹிந்தியில் மட்டுமே எழுத வேண்டும் என்று அறிவித்தால் என்ன செய்வீர்கள்?

உயர்கல்வி சேர்க்கை முதல் மத்திய அரசுப் பணிகள் வரை எல்லாவற்றையும் ஹிந்தி பேசும் மாணவர்களுக்கு விட்டுக் கொடுக்கும் அளவுக்கு வசதியாக இருக்கிறீர்களா?” எனக் கேட்டுள்ளார். அவரது கேள்வி குழந்தைக்கு இந்தி தேவை என நினைக்கும் பெற்றோரிடம் சேர வேண்டும்.

## ஃப்ளாஷ்பேக்





பி.பன்னீர்செல்வம்

### சாத்தூரில் கழகக்கொடி!

1997-ஆம் ஆண்டு, விருதுநகர் மாவட்டத்தில் கொடியேற்றி வைப்பது உள்பட பல்வேறு கழக நிகழ்ச்சிகளில் பங்கேற்க, அன்றைய கழக இளைஞர் அணிச் செயலாளர் இன்றைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வருகை தந்திருந்தார், அப்போது, அவர் சாத்தூர் முக்குலத்தில் கொடியேற்றி வைத்த போது எடுத்துக்கொண்ட புகைப்படம் இது.

**– பி.பன்னீர்செல்வம், சாத்தூர், விருதுநகர் மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல் : youthwing@dmk.in

## கருவூலம்

### தமிழ்நாடே போர்க்கோலம்…

1963-ஆம் ஆண்டு, இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டக் களம் மிக வீச்சாக இருந்தது. 1965-ஆம் ஆண்டிலிருந்து நாடு முழுவதும் இந்திய அலுவல் மொழியாக இருக்கும் என்கிற ஒன்றிய அரசுக்கு எதிராக தமிழ்நாடு வீறுகொண்டு எழுந்தது. ‘இந்தியை எதிர்த்து, தமிழ்நாடு போர்க்கோலம் பூண்டு விட்டது’ என ஆங்கில பத்திரிகைகள் எழுதின. ஏப்ரல் 18-ஆம் தேதி சென்னை கடற்கரையில் நடந்த கூட்டத்தில் இந்தித் திணிப்பை எதிர்க்க, ஐந்தாவது போராட்டக் களம் அமைக்கப்பட்டது.

## மாநாடு

**ர.பிரகாசு** **51**

திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...

ஓவியம் : சிகரன்




# மாணவர் எழுச்சி!

கருஞ்சட்டைப் படைக்கு ஆட்கள் திரட்டுவதை, பெரியார் தீவிரப்படுத்தியிருந்த வேளையில், நீடாமங்கலத்தில் ‘திராவிடர் கழக மாகாண மாநாடு’, 23, 24.03.1946 ஆகிய 2 நாட்கள் நடைபெற்றது. ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்டோர் பங்கேற்ற இம்மாநாட்டில், சுமார் இரண்டாயிரம் பேர் மாணவர்கள். அவர்களில் 1,500-க்கும் மேற்பட்டோர் கருஞ்சட்டையோடு வந்திருந்தனர்.

ஆற்றங்கரையோரம் அழகுற அமைக்கப் பட்டிருந்த மாநாட்டுப் பந்தலுக்கு, இந்தி எதிர்ப்புப் போரில் தீயில் வெந்து வரலாற்றில் மலர்ந்த தாளமுத்து, நடராசன் பெயர் சூட்டப்பட்டிருந்தது. ஊர்வலம் மாநாட்டுப் பந்தலை அடைந்தபோது, பெரியாரைக் கண்டு உணர்ச்சிப் பெருக்கில் ஆர்ப்பரித்தது இளைஞர் கூட்டம்.

அப்போது, அண்ணமலைப் பல்கலைக்கழக மாணவியாக இருந்த லாரன்ஸ், “இருட்டறையில் உள்ள திராவிட சமுதாயத்தை இருட்டு நிறத்தை விட வேறெந்த நிறத்தைக் கொண்டு குறிப்பது? தலைகுனிந்து தடுமாறி இருந்த திராவிடத்தில், 20 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு வெள்ளி முளைத்தது, ‘சுயமரியாதை இயக்கம்’ என்ற பெயரால். அந்த வெள்ளியின் வேலைதான் நடுவே இருக்கும் சிவப்பு. வெள்ளிக்கு மூலகர்த்தா இங்கே வீற்றிருக்கும் ‘வெள்ளித்தாடி’ பெரியார். திராவிட நாட்டை நாம் அடைந்தவுடன் கருப்பு நீங்கி, சிவப்பு முழுமையாய் பரவும். அது பிற்கால சந்ததியினரைப் பொறுத்தது” என்று ஆற்றிய கொடி விளக்கம் லட்சிய முழக்கமாக இருந்தது.

மாநாட்டைத் திறந்துவைத்த காந்தி என்ற மாணவி, “சில ஆண்டுகளுக்கு முன்புவரை ஆரியப் பிடியில் இருந்த சிறுவர்களில் பலர், இன்று திராவிட இன உணர்ச்சி மிகுந்து தியாகத் தீயில் சீறிப்பாயும் சிங்கங்களாக விளங்குகின்றார்கள். பெரியாரின் பேருழைப்பே அதற்குக் காரணம். இந்நாளில் மாணவர் கிளர்ச்சியில் முன்னிற்பது, அண்ணாமலைப் பல்கலைக்கழகம். பார்ப்பனர்கள் நலனுக்குத்தான் தோன்றியதோ என்று எண்ணி திராவிடர்கள் கலங்கிய நிலையில், இருந்த அப்பல்கலைக்கழகம், இன்று ஆரியத்திற்கு சாவு மணி அடிக்கும் பல தளபதிகளை உற்பத்தி செய்யும் நிலைக்களமாக விளங்குகின்றது. அக்கழகத்தில் படித்து வருகின்ற நான் உண்மையிலேயே உங்களைக் காட்டிலும் அதிக மகிழ்ச்சி அடைகின்றேன்” என்றார்.

**வடநாட்டுப் பிடியில் இருந்து, திராவிட நாட்டைப் பிரிக்க வேண்டும், பாடத்திட்டங்களில் மத நூல்கள் போதிப்பை நிறுத்த வேண்டும், இன விடுதலை பெறத்தக்க வகையிலான பெரிய போராட்டத்தை, பெரியார் முன்னெடுக்க வேண்டும்”**

தவமணி இராசன் வரவேற்புரை நிகழ்த்த, மாநாட்டுக்குத் தலைமையேற்ற ஏ.இராமசாமி, “நாடு- இனம்- மொழி இவைகளைக் காக்க சிறை செல்லவும், ஆவி கொடுக்கவும் வாய்க்கும் வாய்ப்பே மக்களுக்கு எல்லா நல்வாய்ப்புகளையும் விட மேலானது”என்று கூறியதும், “பெரியாரை, இனி சிறை செல்ல விட மாட்டோம். நாங்கள் யாவரும் சென்ற பிறகுதான் அவருக்கு வாய்ப்பளிப்போம்” என்று ஆரவாரித்தது மாணவர் கூட்டம். அடுத்துப் பேசிய பெரியார், ‘திராவிட மாணவர் கழகம்’ ஏன் தேவை என்பதை, 2 மணி நேரம் விளக்கினார். அன்று மாலை நிறைவுரையும் அவர்தான்.

இரண்டாவது நாள் மாநாட்டுக்குத் தலைமையேற்ற பேரறிஞர் அண்ணா, இந்தியாவில் அன்றைக்கு இருந்த மாணவர் இயக்கங்களை விளக்கி, திராவிட மாணவர் இயக்கத்தின் தேவையை எடுத்துரைத்தார். “இந்தி மீண்டும் புகுத்தப்பட்டால், மாணவர்களே போராட்டம் நடத்துவோம், வடநாட்டுப் பிடியில் இருந்து, திராவிட நாட்டைப் பிரிக்க வேண்டும், பாடத்திட்டங்களில் மத நூல்கள் போதிப்பை நிறுத்த வேண்டும், இன விடுதலை பெறத்தக்க வகையிலான பெரிய போராட்டத்தை, பெரியார் முன்னெடுக்க வேண்டும்” என்பன உட்பட 7 தீர்மானங்கள் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டன. மீண்டும் 3 மணிநேரம் சொற்பொழிவாற்றினார் பெரியார்! பேசிப்பேசியே மாணவர் எழுச்சிக்கு உரமூட்டினார்!

**...கூட்டம் திரளும்**


## பாசறை படிப்பறை

**கௌதம் ராஜ்** **51**

“புத்தகத்தில் உலகைப் படிப்போம், உலகத்தையே புத்தகமாய்ப் படிப்போம்” என்றார் முத்தமிழறிஞர் கலைஞர். அப்படி சுயமரியாதை-சமத்துவம்-சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...

# இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம்!

இந்தித் திணிப்பு என்பது, வெறும் மொழி உரிமை சார்ந்த சிக்கல் அல்ல, பல நேரங்களில் அது அரசியல் உரிமைச் சிக்கல் இன்னும் சில நேரங்களில், அது கலாச்சார உரிமை சார்ந்த சிக்கல், இன்றைக்கு அது நிதி உரிமை தொடர்பான சிக்கலாகவும் பரிணமித்திருக்கிறது. “மும்மொழிக் கொள்கையை ஏற்கும் வரை தமிழ்நாட்டுக்கு நிதி கிடையாது” என்று ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திரா பிரதான் பிதற்றியுள்ளார்.




நேரடியாக இந்தியைத் திணிக்கும் ஏற்பாடுதான் ‘மும்மொழிக் கொள்கை’ என்பது வெள்ளிடை மலை, அப்படியான இந்தியை ஏற்றுக்கொள்ளாத பட்சத்தில், ‘தமிழ்நாட்டிற்கு வர வேண்டிய 2,000 கோடி ரூபாய் நிதியை விடுவிக்க முடியாது’ என்று அவர் கூறி இருக்கிறார்.

**“இந்தி ஒன்றுதான் இந்தியாவின் அலுவல் மொழியாகத் திகழ வேண்டும் என்ற நியாயமற்ற, ஆதிக்கவாதிகளின் கேள்விகளுக்கு ஆய்வுபூர்வமான பதிலை வழங்குகிறது இந்த சிறு நூல்.”**

காலம் காலமாக நம் உரிமைகளை முடக்க வேண்டுமென்று ஒலித்துக் கொண்டிருக்கும் ஆதிக்கக் கருத்தியலின் புதிய குரல் ஒன்றிய கல்வி அமைச்சருடையது. இந்நேரத்தில் 1968-ஆம் ஆண்டு தமிழ்நாட்டைச் சேர்ந்த ஊடகவியலாளர் மோகன் ராம் எழுதிய *‘HINDI AGAINST INDIA: THE MEANING OF DMK’* என்ற நூலை வாசிப்பது அவசியமாகிறது.

இந்தி ஒன்றுதான் இந்தியாவின் அலுவல் மொழியாகத் திகழ வேண்டும் என்ற நியாயமற்ற, ஆதிக்கவாதிகளின் கேள்விகளுக்கு ஆய்வுபூர்வமான பதிலை வழங்குகிறது இந்த சிறு நூல். பாரதி புத்தகாலயம் இந்நூலை மீண்டும் பதிப்பித்து வெளியிட்டிருக்கின்றனர்.

இந்தி அல்லாத எண்ணற்ற மொழிகளின் உரிமையைப் பேசுவது பிரிவினைவாதம் என்று விமர்சிக்கப்படுக்கிறது, ஆனால், இந்திய ஒன்றியத்தின் ஒற்றுமைக்கு எதிராக இருப்பது, இந்தி ஒன்று தான் என்பதை, இந்நூல் சான்றாதாரங்களோடு நிறுவுகிறது. மட்டுமன்றி, இந்தி மொழி பேசும் மக்கள் நிரம்பி உள்ள மாநிலங்கள், ஏன் சமூக-பொருளாதார குறியீடுகளில் பின்தங்கியுள்ளன என்பதற்கான காரணங்களையும் நமக்குச் சுட்டிக்காட்டுகிறது.

தி.மு.கழகம் தமிழ் மொழி உரிமைகளுக்காக மட்டுமல்லாது, இந்தி அல்லாத பிற இந்திய மொழிகளின் உரிமைக்காகவும் தொடர்ந்து குரல் எழுப்பி வரும் வரலாற்றை நமக்கு விளக்குகிறது இந்நூல் . ‘இந்தி வெறி’ என்பது மதவாதிகளையும், பிற்போக்குத் தனம் நிரம்பிய ஆதிக்கவாதிகளையும் பீடித்திருப்பதற்கு, அவர்களின் தாழ்வு மனப்பான்மையே மூல காரணம் என்பதைக் கூறுகிறார் மோகன் ராம்.

இந்தியைத் திணிக்கத் துடிப்பவர்கள், அதிகாரக் குவியலையும், அதை எதிர்த்து, தாய் மொழி உரிமையை நிலைநாட்ட முனைபவர்கள் அதிகாரப் பரவலையும் வலியுறுத்துவதை முன்வைத்து, தி.மு.க.வின் மாநில சுயாட்சியின் கோரிக்கையின் முக்கியத்துவத்தையும் அதன் பின்னணியில் உள்ள கருத்தியலையும் இந்நூல் வலியுறுத்துகிறது.

பிரிட்டிஷ் காலனிய ஆட்சியின் எச்சங்களை அதிகம் கொண்டிருக்கும் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை, மாநிலங்களுக்கு உரிய அதிகாரம் அளிக்கும் வகையில் திருத்த வேண்டும் என்பது உள்ளிட்ட சில பரிந்துரைகளை இந்நூல் நமக்கு வழங்கி இருக்கிறது.


ஒத்திசைவுப் பட்டியலில் இருக்கும் கல்வியைக் காரணம்காட்டியே இந்தியை நம் மீது திணிக்கத் துடிக்கும் ஆட்சியாளர்களுக்கு எதிராக, மேலும் வலுவான உரிமைக் குரலையே எழுப்பிட அரை நூற்றாண்டுக்கு முன் வெளியான இந்நூல் அவசியம் துணை புரியும்.

**...வாசிப்போம்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம்

**753**

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131